


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 002 | 4 Pages | 02.08.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 002 | 4 பக்கங்கள் | 02.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று**

**விளக்கம்: பற்றுகளைத்துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.**

# காரிய பூனைதான் திமுக: தவெக பதிலடி



சென்னை, ஆக. 2

த.வெ.க தகவல் தொழில்நுட்ப அணி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

விவசாயிகள் நலன்களுக்காகவும் கர்நாடக வாழ் தமிழ் சொந்தங்களுக்காகவும் யோசித்துச் செயல்படுவதுதான் மக்கள் விரும்பும் முதல்அமைச்சர், நம் வெற்றித் தலைவர், தமிழ்நாடு முதல்அமைச்சரின் மனசாட்சி உள்ள மக்களாட்சி.

திமுக போல சுயநலம் கொண்டு தனி ஆவர்த்தனம் செய்யத்துடிப்பவர் இல்லை, எங்கள் வெற்றித்தலைவர். தொடர்ந்து பல ஆண்டுகளாக மத்திய அரசிடம்பேரம்பேசி, பெறவேண்டிய இலாகாக்களைபெற்றபோதெல்லாம் காவிரி விவகாரத்திற்காக ஒரு மந்திரி பதவியையாவது, ஒருநாளாவது உதறி இருக்குமா இந்தத் திமுக? அத்தனை ஆண்டுகளில் ஒருமுறையாவது காவிரிப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணமுயன்றிருக்குமாஇந்தத்திமுக? அப்போதெல்லாம் பதவியில் ஒட்டிக்கொண்டு சுகம் கண்ட சுயநல இயக்கம்தான் இந்தத் திமுக.

ஆட்சியில் இருக்கும்போது சத்தம் போடுவதுபோல சவுண்ட் கொடுத்துவிட்டு, மியூட் மோடுக்குச் சென்று, மியாவ் என்று கூட சத்தம் எழுப்பாத காரிய பூனைதான் திமுக. ஆனால், ஆட்சி பறிபோன பிறகு பாருங்கள் மண், மொழி, மானம் என்று உரிமை முழக்கத்தை எழுப்பி எம்பி எம்பிக் குதிக்கும். எப்போதும் மக்களை தூண்டிவிட்டு குளிர்காயும் திமுக, இப்போது எரிச்சல் மற்றும் விரக்தி மோடில் அலறிக்கொண்டு இருக்கிறது. கடந்த மே மாதத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட கட்சியாகத் தவிக்கும் திமுக, காவிரி விவகாரத்தில் கபட நாடகமாடுவதை மக்கள் ஏற்கமாட்டார்கள்.

எனவே, காவிரி பிரச்சனையில் ஸ்டாலின், திமுக ஆட்சி போய் விட்டதே, தவெக ஆட்சி வந்து விட்டதே என்று வன்மமாக பேசாமல் மக்கள் ந

லன் சார்ந்து உண்மையாக பேச வேண்டும். அப்படி அவரால் பேச முடியுமா முடியாதா? என்றால் அவர் உள்மனம் முடியாது என்றுதான் உண்மையான வன்மம் பேசும். இது அவர் மட்டுமன்று, உலகமே அறிந்த உண்மை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாட்ஸ் அப்பில் அறிமுகம் ஆகும் புதிய வசதி: அடிக்கடி ஸ்டேடஸ் வைப்பவர்களுக்கு குட் நியூஸ்



சமூக வலைத்தள பயனர்கள் இடையே வாட்ஸ்அப் தற்போது தவிர்க்க முடியாத செயலியாக மாறிவிட்டது. நண்பர்களுடன் அரட்டைஅடிப்பது மட்டுமின்றி பல முக்கியமான கோப்புகள், இமேஜ்கள் உள்ளிட்டவற்றை பகிரும் தளமாகவும் வாட்ஸ் அப் மாறிவிட்டது. தொழில் சார்ந்தஉரையாடல்கள், குடும்பச் செய்திகள், வேலை தொடர்பான உரையாடல்கள், பள்ளி குழுக்கள், வாடிக்கையாளர் மெசேஜ்கள் என பல்வேறு காரணங்களுக்காகவும் பலருடன் தினமும் வாட்ஸ் அப்பிலேயே பலரும் உரையாடுகிறார்கள்.

இந்தியாவில் மட்டும் உள்ள வாட்ஸ் அப் கணக்குகளின் எண்ணிக்கை 50 கோடிக்கும் மேல் உள்ளது. பயனர்களை கவரவும் சந்தையில் போட்டியை சமாளிக்கவும் வாட்ஸ் அப்பில் அவ்வப்போது புதிய அப்டேட்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில், வாட்ஸ் அப்பில் புதிய அப்டேட் ஒன்று வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது.

வாட்ஸ்அப்பில் ஸ்டேட்டஸ் பதிவிட்ட பிறகும் அதன் கேப்ஷனை 15 நிமிடங்களுக்குள் திருத்தும் புதிய வசதியை, அந்நிறுவனம் ஆண்ட்ராய்டு பீட்டா பதிப்பில் சோதனை செய்து வருகிறது. இதனால், ஸ்டேட்டஸை நீக்கி மீண்டும் பதிவேற்ற வேண்டிய அவசியம் இருக்காது. விரைவில் அனைத்து பயனர்களுக்கும் இந்த வசதி அறிமுகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தெற்கு ரெயில்வேயின் புதிய பொது மேலாளராக சுப்பா ராவ் பதவியேற்பு



புதுடெல்லி, ஆக. 2

தெற்கு ரெயில்வேயின் புதிய பொது மேலாளராக சுப்பா ராவ் இன்று பதவியேற்று உள்ளார்.

தெற்கு ரெயில்வேயின் பொது மேலாளராக ஆர்.என். சிங் பதவி வகித்துவந்தநிலையில், அவருடைய பதவி காலம் நேற்று (ஜூலை 31, 2026) வரை நீட்டிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், புதிய பொது மேலாளராக சுப்பா ராவ் இன்று பதவியேற்று கொண்டார்.

இந்திய ரெயில்வே சேவை துறையில் 1987ம் ஆண்டு முதல் தன்னுடைய பணியை தொடங்கிய ராவ், உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளிலும் தலைமை பொறுப்புகளை வகித்து உள்ளார். அவர் தெற்கு ரெயில்வேயின் புதியபொதுமேலாளராகபதவியேற்கும்முன்னர், சென்னைஒருங்கிணைந்த ரெயில்பெட்டி தொழிற்சாலையின்பொதுமேலாளராகபதவிவகித்துள்ளார்.

அதற்கு முன்பு, ஹப்பள்ளி, சேலம் மண்டலம், செகந்திராபாத், மைசூரு, பெங்களூரு உள்ளிட்ட நகரங்களில் ரெயில்வே துறையில் பல்வேறு பணிகளை வகித்திருக்கிறார். இயந்திர பொறியியலில் பட்டப்படிப்பை முடித்துள்ள அவர், பெங்களூரு ஐ.ஐ.எம்.மில் பொது கொள்கை மற்றும் மேலாண்மை பட்டமேற்படிப்பையும் முடித்துள்ளார்.

# கேரளாவில் கனமழை: 9 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்



திருவனந்தபுரம், ஆக 2


கேரளாவில் 9 மாவட்டங்களில் இன்று அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. கனமழையால் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கேரளாவில் 9 மாவட்டங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

தன்படி, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கன்னூர், காசர்கோடு, பத்தனம்திட்டா, கோட்டயம், இடுக்கி, திரிச்சூர் ஆகிய 9 மாவட்டங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய அதிகனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# தமிழகத்திற்கு ரூ.4,466 கோடி விடுவிப்பு



புதுடெல்லி, ஆக. 2

வரவிருக்கும் பண்டிகை காலத்தைக் கருத்தில் கொண்டு, மாநிலங்கள் மூலதனச் செலவினங்களை விரைவுபடுத்தவும், அவற்றின் வளர்ச்சி மற்றும் நலன்கள் தொடர்பான செலவினங்களுக்கு நிதியளிக்கவும், மத்திய அரசு ரூ.1,09,019 கோடி வரிப் பகிர்வை மாநில அரசுகளுக்கு முன்கூட்டியே ஒரு தவணையாக வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில்மாநிலங்களின்மூலதனமற்றும்வளர்ச்சிசெலவினங்களை விரைவுபடுத்தும் வகையில், மத்திய அரசு தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்குரூ.1,09,019கோடிமதிப்பிலானவரிப்பகிர்வுத்தொகையை விடுவித்துள்ளது.

தமிழகத்திற்கான தொகையாக, ரூ.4466 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

# மாவட்ட அளவிலான குத்து சண்டை போட்டி






குன்னூர், ஆக. 2

நீலகிரி மாவட்டம் குன்னூர் மவுண்டன் ஹோம் பள்ளியில் கோவை ஆலம் விழுதுகள் பவுண்டேஷன், ரோட்டரி கிளப் கோவை மற்றும் நீலகிரி மாவட்ட குத்துச்சண்டை விளையாட்டு சங்கம்இணைந்துநடத்தும்மாவட்டஅளவிலானகுத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் 100கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர் பல்வேறு எடை பிரிவுகளில் நடைபெற்ற இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக ஆலம் விழுதுகள் பவுண்டேஷன் நிறுவனர் மீனா ஜெயக்குமார், ரோட்டரி கிளப் கோவை தலைவர் தேன்மொழி, உயர் நீதிமன்ற வழக்கறிஞர் வினோத் மற்றும் கிருத்திகா மாவட்ட சங்கத்தின் தலைவர் மணிகண்டன், துணைச் செயலாளர் ஷாலினி ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை துவக்கி வைத்தனர். முன்னதாக பள்ளி முதல்வர்க்யூட்டன்டயாரான்போப்அனைவரையும்வரவேற்று பேசினார் இப் போட்டிக்கான ஏற்பாடுகளை பயிற்சியாளர் அப்பாஸ் செய்திருந்தார்.

# காஞ்சியில் மகளிர்களால் நடத்தப்படும் பெண்களுக்கான வணிக கண்காட்சி காஞ்சி கிராண்ட் எஸ்போ 2026



காஞ்சிபுரம் காமராஜர் வீதியில் உள்ள தனியார் மண்டபத்தில் ஆகஸ்ட் 1 ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஆகஸ்ட் 2 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருதினங்கள் மகளிர்களால் நடத்தப்படும், மகளிர்களுக்கான மாபெரும் வணிக கண்காட்சியான காஞ்சி கிராண்ட் எஸ்போ 2026 திறப்பு விழா நடைபெற்றது.

இந்த கண்காட்சியில் மகளிர்கள் தங்கள் வீட்டிலிருந்து செய்யும் சிறுவணிகத்தைபெரியஅளவில்மக்கள்மத்தியில்பிரபலப்படுத்தி அவர்களின் வணிகம் வளர்ச்சி பெறுவதற்காகவே இந்த கண்காட்சியில் கடைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வணிக கண்காட்சியில் பொதுமக்களுக்கு தேவையான வளையல்கள், ஆடைகள், ஹேண்ட் பேக், மசாலா பொடி வகைகள், செடி வகைகள், அழகு சாதனபொருட்கள், ஜூவல்லரி, ஆண்களுக்கான ஆடை வகைகள், குழந்தைகளுக்கான ஆடை வகைகள், பெண்களுக்கு தேவையான ஆடை மற்றும் அணி கலன்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, ஸ்னாக்ஸ், குளிர்பான வகைகள், புட் கோர்ட் போன்றவைகள் ஸ்டால்களில் இடம் பெற்றுள்ளன.

சனி, ஞாயிறு அரசு விடுமுறை நாட்களில் இந்த கண்காட்சி காஞ்சிபுரம் நகர மக்களுக்கு சிறந்த பொழுது போக்காய் அமையும்.

இந்த முகாமிற்கானஏற்பாடுகளை டி. டி. எஜூகேஷன்அகாடமி நிறுவனர் முனைவர் எம். துர்காதேவி, ரோஸ் பொட்டிக்யூ உரிமையாளர்டி. சரண்யா, காஞ்சி வெஜ்ஜி சப்பர்ஸ் உரிமையாளர் கே. பி. சந்தியமாய், தர்சன் டிவி உரிமையாளர் வி. பத்மநாபன் மற்றும் குழுவினர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்தகண்காட்சியினைகாணவரும்பொதுமக்களுக்குகுலுக்கள் முறையில் தினமும் 50 நபர்களுக்கு வெள்ளி நாணயம் மற்றும் பரிசும் வழங்கப்பட உள்ளது.


# அரசு ஸ்டான்லி முதல்வர் டாக்டர் அரவிந்த் துவக்கி வைத்த தாய்ப்பால் விழிப்புணர்வு மனித சங்கிலி: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தாய்ப்பாலின் அவசியம் குறித்து விழிப்புணர்வு




சென்னை, ஆக.2

உலக தாய்ப்பால் வாரத்தை முன்னிட்டு, சென்னை ராயபுரத்தில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சமூக குழந்தைகள் நல நிலையம் சார்பில் விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மற்றும் டீன் பேராசிரியர் டாக்டர் அரவிந்த் தலைமை தாங்கி, பலூன்களை பறக்கவிட்டு தாய்ப்பால் விழிப்புணர்வு மனித சங்கிலியை துவக்கி வைத்தார். குழந்தைகள் நலத் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் கணேஷ் முன்னிலை வகித்தார். மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஜோதி குமார், ஆர்.எம்.ஓ. டாக்டர் வனிதா மலர், உதவி பேராசிரியர்கள், முதுநிலை மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். இப்ராஹிம் சாலையில் நடைபெற்ற மனித சங்கிலியில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, தாய்ப்பாலின் அவசியம் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியில் அதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து, அரசு ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் வடசென்னை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை விளக்கும் புகைப்படக் கண்காட்சி, செல்பி பூத், விழிப்புணர்வு கோலங்கள் உள்ளிட்ட காட்சிகளை டாக்டர் அரவிந்த், டாக்டர் கணேஷ், டாக்டர் ஜோதி குமார், டாக்டர் வனிதா மலர் ஆகியோர் பார்வையிட்டனர். மேலும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தாய்மார்களுக்கும், பொதுமக்களுக்கும் தாய்ப்பாலின் அவசியம் குறித்த விழிப்புணர்வு மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி நிறைவில் அனைவரும் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# கம்பம் சுருளி அருவியில் திடீர் கன மழையால் வெள்ள பெருக்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை




தேனி மாவட்டம் கம்பம் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள வெள்ளி மலை, மனளாறு, வென்னி யாறு, மேகமலை, உள்ளிட்ட பகுதிகளில் தென் மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்து தொடர் கன மழையால் அருவிக்குநீர்வரத்துதிடீர்எனஅதிகரித்து வந்ததால் சுருளி அருவியில் திடீர் வெள்ள பெருக்கு ஏற்பட்டு உள்ளது இந்த நிலையில் கடந்த சில மாதங்களாகவே மேற்குத் தொடர்ச்சி மலையில் தென் மேற்கு பருவ மழை சரியாக இல்லாததால் அப்பகுதி பொதுமக்கள் அருவிக்கு குளிக்க சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர்.

இந்நிலையில் கடந்த இரு தினங்களாக தென் மேற்கு பருவ மழை தீவிரமடைந்து நீர் வரத்து அதிகரித்து சுருளி அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அருவியில் குளிக்க கம்பம் கிழக்கு சரகவனத்துறை தடை விதித்துள்ளது. மேலும் தென் மேற்கு பருவ மழை தீவிரம் அடைந்து நீடித்தால் வெள்ள பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதால். நீர்வரத்து குறையும் வரை அருவியில் குளிக்க தடை நீடிக்கும் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்

# வழக்கை சட்டப்படி சந்திப்பேன் காவல் நிலையத்தில் ஆஜரான பின் செந்தில் பாலாஜி பேட்டி



திருவல்லிக்கேணி, ஆக. 2

திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்ட பிறகு செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:


சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்பான வழக்கில் புகாரிலும் பெயர் இல்லை. எப்.ஐ.ஆரிலும் பெயர் இல்லாத நிலையிலும் என் பெயர் சேர்க்கப்பட்டு அதற்காக முன் ஜாமீன் பெற்று காவல் நிலையத்தில் தொடர்ந்து காலையும் மாலையும் கையெழுத்திட்டு வருகிறேன். லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதலாக ஒரு வழக்கு பதிவு செய்து, நான் தங்கியிருந்த அறைகளிலும் பல்வேறு இடங்களிலும் சோதனை செய்து வழக்கை பதிவு செய்து உள்ள்னர். அந்த வழக்கு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெறுவதற்காக மூத்த வழக்கறிஞர்களுடன் கலந்து ஆலோசித்தேன்.

இதனால், கையெழுத்திடுவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று விசாரணை அதிகாரிக்கு கடிதம் அனுப்பியிருந்தேன். சென்னை உயர் நீதிமன்றத்திலும் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. அதற்கான அனுமதிவேண்டும் என்று தாக்கல் செய்து இருந்தோம். உச்ச நீதிமன்றம் முன் ஜாமீன் வழங்கிய நிலையில், காவல் நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறேன்.

இருவர் கைது செய்யப்பட்டதில் ஒருவர் பெயர் எப்.ஐ.ஆரில் உள்ளது. இன்னொருவர் பெயர் எப்.ஐ.ஆரிலேயே இல்லை. அவரும் கைது செய்யப்பட்டு இருக்கிறார். சட்டப்படி வழக்கை எதிர்கொள்ள தயாராகி இருக்கிறோம். வழக்கறிஞர்களுடன் ஆலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கப்பூர்வமான அரசு என்றால் மக்களின் அடிப்படை கோரிக்கைகளை , தேவைகளை நிறைவேற்றும் பணிகளில் கவனம் செலுத்தும். ஆனால், தவெக அரசு வழக்கு போடுவதில் தவெக அரசு முனைப்பு காட்டி வருகிறது. நீதிமன்றம் இருக்கிறது. எத்தனை வழக்குகள் போட்டாலும் நீதிமன்றத்தில் எதிர்கொண்டு இந்த வழக்குகள் அனைத்தும் பொய்யானவை என்பதை நிரூபித்து காட்டுவோம்" என்றார்.

# ரேஷன் கடைகளில் நாளை சிறப்பு பயோமெட்ரிக் முகாம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்





தூத்துக்குடி, ஆக. 2

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ரேஷன் கடைகளில் நாளை சிறப்பு பயோமெட்ரிக் முகாம் நடைபெற உள்ளது என்று மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் (ரேஷன் கடைகள்), குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் தங்களது கைரேகை மற்றும் கண்கருவிழி (Biometric) பதிவுகளை மேற்கொள்ள சிறப்பு முகாம் நாளை (ஆகஸ்ட் 2) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வரும் குடும்ப அட்டைதாரர்களில், இதுவரையிலும் கைரேகை அல்லது கண்கருவிழிபதிவுசெய்யாதஉறுப்பினர்கள் அனைவரும் தங்களது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியூர்மற்றும்வெளிமாவட்டங்களில் தங்கிப் பணியாற்றி வருபவர்கள், மற்றும் பள்ளி, கல்லூரிகளில் பயின்று வரும் மாணவ, மாணவிகள் தாங்கள் தற்போது வசிக்கும் ஊர் அல்லது மாவட்டத்தில் உள்ள அருகாமையிலுள்ள நியாயவிலை கடைகளுக்கே நேரில் சென்று தங்களது ரேகையைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ்அரசின்சலுகைகளைத் தொடர்ந்து பெறவும், இந்தச் சிறப்பு வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களது விவரங்களைப் பதிவு செய்யவும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கனிம வளங்களை எடுத்துச் செல்ல தடை; விவசாய நிலங்களை அழிப்பதற்கு அனுமதியா? வேல்முருகன்



சென்னை, ஆக. 2

தமிழ்நாடு அரசே இரட்டை நிலைப்பாடு ஏன்? நெடுஞ்சாலை வழியாக கர்நாடகாவுக்கு எண்ணெய் கொண்டு செல்ல முடியும் என்றால், விவசாய நிலங்களை ஏன் சிதைக்க வேண்டும்? என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் கேள்வி எழுப்பி உள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ்தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழ்நாட்டின் உரிமையான காவிரி நீரைக் கூட திறக்க மறுக்கும் கர்நாடக அரசுக்கு, தமிழ்நாட்டின் வளமான விவசாயநிலங்களை அழித்து எண்ணெய் குழாய் அமைத்துக் கொடுக்கும் அநீதியைத் தமிழக வாழ்வுரிமைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழகத்தின் உரிமைகளை மதிக்காத மாநிலங்களின் தேவைகளுக்காக, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களையும், விவசாய வளங்களையும் பலியிடும் போக்கு இனியும் தொடர அனுமதிக்க முடியாது. தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் கனிம வளங்கள் கட்டுப்பாடின்றி பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து, தமிழ்நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது. அதே கொள்கை, அதே உறுதி, அதே பாதுகாப்பு விவசாய நிலங்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பிற மாநிலங்களுக்காகத் தமிழ்நாட்டின் கனிம வளங்களைச் சுரண்ட அனுமதிக்கக் கூடாதென்றால், பிற மாநிலங்களின் தேவைக்காக தமிழ்நாட்டின் விவசாய நிலங்களையும் அழிக்க அனுமதிக்கக் கூடாது. இதுவே சரியானது. கனிம வளங்களைப் பாதுகாக்க சட்டம் இருந்தால், விவசாய நிலங்களைப் பாதுகாக்கவும், அதைவிட வலுவான பாதுகாப்பு இருக்க வேண்டும். பாரத் பெட்ரோலியம் நிறுவனம் கோவை மாவட்டம் இருகூரிலிருந்து கர்நாடக மாநிலம் தேவனகுந்தி வரை எண்ணெய் குழாய் பதிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் முத்தூரிலிருந்து கர்நாடக எல்லை வரை நெடுஞ்சாலை ஓரமாக குழாய்கள் பதிக்கப்படுகின்றன.

ஆனால், இருகூரிலிருந்து முத்தூர் வரையிலான சுமார் 70 கிலோமீட்டர் தொலைவுக்கு மட்டும் விவசாயிகளின் எதிர்ப்பை மீறி விளைநிலங்களைத் தோண்டி குழாய் பதிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும்.

நெடுஞ்சாலை வழியாகக் கொண்டு செல்ல முடியும் என்றால், விவசாய நிலங்களை ஏன் சிதைக்க வேண்டும்?

கர்நாடகாவுக்கு எண்ணெய் கொண்டு செல்ல, தமிழனின் வயல்தான் பாதையா? நாளை எண்ணெய் குழாயில் கசிவு ஏற்பட்டால், அந்த நிறுவனம் இழப்பீடு கொடுக்கலாம். ஆனால் நஞ்சான மண்ணை மீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா? மாசடைந்த நிலத்தடி நீரை மீட்டெடுக்க முடியுமா? பல தலைமுறைகள் உழைத்து உருவாக்கிய விளைநிலத்தை மீண்டும் உருவாக்க முடியுமா?

கேரளாவுக்காக தமிழ்நாட்டின் கனிம வளங்களை எடுத்துச் செல்லக் கூடாது என்பதே எங்கள் நிலைப்பாடு. அதேபோல், கர்நாடகாவுக்காகத் தமிழ்நாட்டின் விவசாய நிலங்களையும் அழிக்கக் கூடாது என்பதும் எங்கள் உறுதியான கொள்கை.

எனவே, தமிழ்நாடு அரசு கனிம வளங்களைப் பாதுகாக்க எடுத்துள்ள கொள்கையைப் போலவே, பிற மாநிலங்களின் திட்டங்களுக்காகத் தமிழ்நாட்டின் விவசாய நிலங்களை கையகப்படுத்தவோ, சேதப்படுத்தவோ கூடாது என்ற, தெளிவான கொள்கை முடிவை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பாரத் பெட்ரோலியம் நிறுவனம் விவசாய நிலங்கள் வழியாக மேற்கொள்ளும் பணிகளை உடனடியாக நிறுத்தி, ஏற்கனவே பயன்படுத்தப்படும் நெடுஞ்சாலை வழித்தடத்திலேயே முழு திட்டத்தையும் மாற்ற தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனி ஆவர்த்தனம் செய்ய நினைத்துத் தனிமைப்பட்டு நிற்கிறார் முதல்அமைச்சர் விஜய் மு.க. ஸ்டாலின்



சென்னை, ஆக. 2

திமுகதலைவர் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் தளபதிவில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், விவசாயிகள் சங்கத்தினர் எல்லோரும் மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பயனளிக்காது என்று எச்சரித்தோம். கர்நாடகம் செல்ல வேண்டாம் என்று தமிழ்நாடு முதல்அமைச்சருக்கு கோரிக்கை வைத்தோம்.

தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தரமுடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்ட மாநிலத்துடன் சட்டரீதியாகத்தான் போராட வேண்டும் என்பதே கடந்தகாலத்தில் நாம் பெற்ற படிப்பினை. உபரிநீரை வெளியேற்றும் வடிகால் பகுதியாகத்தான் அவர்கள் தமிழ்நாட்டைப் பார்க்கிறார்கள்.

ஆனால், தான் கர்நாடகம் சென்றால் காவிரியைக் கையோடு எடுத்துவந்து விடலாம் என்று தமிழ்நாட்டின் புதிய முதல்அமைச்சர் நினைத்தாரோ என்னவோ... நமது எச்சரிக்கைகளை மீறி கர்நாடகம் செல்வதற்கு தூது அனுப்பினார். தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்துவிடச் சொல்லி CWMA உத்தரவிட்டதும் "நீங்கள் இப்போதைக்கு வரவேண்டாம்" என்று கேட்டைச் சாத்திவிட்டார்கள்.

இதுபோன்ற சூழ்நிலைகளை முன்பே கணித்துதான், தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் எச்சரித்தோம். இனியேனும் தமிழ்நாட்டின் உயிர்ப் பிரச்சினையான காவிரிவிவகாரத்தைமுதல்அமைச்சர்ஆலோசனைகளோடு அணுகவேண்டும். நமது முதல்அமைச்சரைவரவேண்டாம் என்று சொல்லிவிட்டு, கர்நாடகத்தில் ஆகஸ்ட் 2 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அம்மாநில முதல்மந்திரி அழைப்பு விடுத்து அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதைத் தனது செயலால் உணர்த்திவிட்டார்.

முதல்அமைச்சர் விஜய் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவது எப்போது? முடியுமா முடியாதா?

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இரவில் மதுப்பிரியர்கள் கூடாரம்: திருப்பூர் மார்க்கெட் கடைகள் தகடுகளால் அடைப்பு

திருப்பூர், ஆக. 2

திருப்பூர் மத்திய பஸ் நிலையம் எதிரே ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் தினசரி மார்க்கெட் புதிதாக கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் இன்னும் திறப்பு விழா காணப்படாமல்உள்ளது. இந்தகடைகளைஏலம்விடுவதில் குளறுபடி நிலவுவதால் திறப்பு விழா தள்ளிப்போவதாக மாநகராட்சி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன்காரணமாக இரவு நேரங்களில் மதுப்பிரியர்களின் கூடாரமாக இந்த தினசரி மார்க்கெட் கடைகள் மாறிப்போனது. மார்க்கெட்டின் முன்புறம் உள்ள கடைகளுக்கு கதவுகள் எதுவும் இல்லாததால் இரவு நேரங்களில் சாலையோரவாசிகள், மதுப்பிரியர்கள் இந்த கடைகளுக்குள் சென்று தங்குவது, தகாத செயல்களில் ஈடுபடுவது அதிகரித்தது.

எனவேஇதுகுறித்து 'தினத்தந்தி'யில்செய்திபிரசுரமானது. இதன் எதிரொலியாக தினசரி மார்க்கெட் முன்புறம் உள்ள கடைகளில் இரும்பு தகடுகளை கொண்டு யாரும் உள்ளே செல்லாத வகையில் அடைக்கப்பட்டுள்ளன. அசம்பாவித சம்பவங்கள்நடைபெறுவதற்குமுன்மாநகராட்சிநிர்வாகம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை மக்கள் பாராட்டினர்.

# அதிக விலைக்கு உரம் விற்கும் கடைகளுக்கு விற்பனை தடை: வேளாண்மை அதிகாரி எச்சரிக்கை



தூத்துக்குடி, ஆக. 2

அரசு நிர்ணயித்த விலையை விட அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்யும் உரக்கடைகளுக்கு உடனடியாக 'விற்பனை தடை' விதிக்கப்படும் என தூத்துக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) கண்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டாரத்தில் இயங்கி வரும் தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க உரக்கடைகளில், தூத்துக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) கண்ணன்திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது உரங்களின் இருப்பு நிலை மற்றும் விற்பனை விலைக் குறிப்புகளைக் கேட்டறிந்த அதிகாரி, உரங்களை விவசாயிகளுக்கு அரசு நிர்ணயம் செய்த விலையிலேயே விற்பனை செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

அரசு நிர்ணயித்த விலையை விட அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்யும் உரக்கடைகளுக்கு உடனடியாக 'விற்பனைத் தடை' விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் பூச்சி மருந்துகள் மற்றும் உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். அங்கீகாரம் பெறாத நிறுவனங்களின் பூச்சி மருந்துகள் மற்றும் இயற்கை உரங்களை விற்பனை செய்யத் தடை விதிக்கப்படும் எனத் தெரிவித்து, இதுகுறித்துத் தொடர்ந்து கண்காணிக்க வட்டார உர ஆய்வாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

யூரியா உரத்தினை விவசாயிகளுக்கு அவர்களின் தேவைக்கேற்ப மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என அனைத்துத்தனியார்மற்றும்கூட்டுறவு உரக்கடைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

# கொளத்தூர் தொகுதியில் முறையாக தேர்தல் நடக்கவில்லை என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன: திமுக





கொளத்தூர் சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட 14 வாக்குச்சாவடிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும் என திமுக தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்தது. இதையடுத்து இவிஎம் எந்திரங்கள் ஆய்வு செய்யும் பணி கடந்த 29 ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. நடந்து முடிந்த 2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமாக மு.க ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு இருந்தார்.

இவரை எதிர்த்து தவெக சார்பில் விஎஸ் பாபு களம் இறங்கினார். தேர்தல் ரிசல்டில் மு.க ஸ்டாலினை, விஎஸ் பாபு 8,795 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றார். தேர்தல் முடிவுகள் வெளியாகி 2 மாதங்களுக்கும் மேல் ஆகியுள்ள நிலையில், கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட 14 வாக்குச்சாவடிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும் என திமுக தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை வைத்தது. இதையடுத்து, சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த கொளத்தூர் தொகுதிக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கடந்த 29 ஆம் தேதி ஆய்வு செய்யப்பட்டது.

மாநகராட்சி ஆணையர் சமீரன் முன்னிலையில் இவிஎம் இயந்திரங்கள் திறக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. திமுக சார்பில் மூத்த வழக்கறிஞர் என். ஆர் இளங்கோ உள்ளிட்டோரும் தவெக சார்பில் விஎஸ் பாபுவின் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள் பங்கேற்று இருந்தனர். ஒரு நாளைக்கு 2 வாக்குச்சாவடிகள் வீதம் மொத்தம் 14 வாக்குச்சாவடிகளுக்கு 7 நாட்களாக இந்த வாக்குந்திரங்கள் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

4வது நாளாக வாக்கு எந்திரங்கள் சரிபார்க்கும் பணி நடந்தது.

இந்நிலையில் திமுக மூத்த வழக்கறிஞர் என்.ஆர் இளங்கோ கொளத்தூர் தொகுதியில் தேர்தல் முறையாக நடைபெறவில்லை என கூறியுள்ளார். மேலும் ஆய்வு செய்த 8 எந்திரங்களில் 3 எந்திரங்கள் சரியாக இல்லை. இது தொடர்பாக மு.க ஸ்டாலினின் அறிவுறைப்படி நீதிமன்றத்தை நாடுவோம்" என்று கூறியுள்ளார்.

# "ஆவின் பால் பாக்கெட் பிலிம்களில் ரசாயன நெடி... 160 ரோல்களை திருப்பி அனுப்பிய மதுரை ஆவின்!"





மதுரை, ஆக. 2

மதுரை மாவட்டத்தில் ஆவின் பால் பாக்கெட்டுகளில் ரசாயன நெடி வீசியதால் 160 ரோல்களைஒப்பந்தநிறுவனத்திற்கு ஆவின்நிர்வாகம் திருப்பி அனுப்பியது.

மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விநியோகிக்கப்பட்ட ஆவின் நீல நிறப் பால் பாக்கெட்டுகளில் கடந்த சில நாட்களாக பிளாஸ்டிக் மற்றும் குளோரின் போன்ற ரசாயன நெடி வீசியது. இதையடுத்து பொதுமக்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து பரவலான புகார்கள் எழுந்தன. குழந்தைகள் மற்றும் நோயாளிகள் தினமும் பயன்படுத்தும் பாலில் இத்தகைய நெடி வருவது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

இந்தப் புகாரைத் தொடர்ந்து, உணவுப் பாது காப்புத் துறை அதிகாரிகள் சாத்தமங்கலம் ஆவின் பால் பண்ணை மற்றும் பல்வேறு விநியோக மையங்களில் அதிரடி சோதனை நடத்தி பால் மாதிரிகளைச் சேகரித்து ஆய்வகத்திற்கு அனுப்பினர். முதற்கட்ட விசாரணையில், பால் பாக்கெட்டுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பாலித்தீன் பிலிம் பேப்பர் ரோல்களில் ஏற்பட்ட தரம் மற்றும் குறைபாடே இந்த ரசாயன நெடிக்குக் காரணம் என மதுரை ஆவின் நிர்வாகம் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தரமற்ற பிலிம்களை சப்ளை செய்த ஒப்பந்த நிறுவனத்திற்கு விளக்கம் கேட்டு ஆவின் நிர்வாகம் மற்றும் பால்வளத்துறை சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேலும், பண்ணையில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த ரசாயன நெடி கொண்ட 160 பாலித்தீன் பிலிம் ரோல்களை ஆவின் நிர்வாகம் உடனடியாக ஒப்பந்த நிறுவனத்திற்கே திருப்பி அனுப்பியது.

தற்போது அந்த தரமற்ற பிலிம்கள் பயன்பாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டு, தனியாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு பொதுமக்களுக்கான ஆவின் பால் விநியோகம் எவ்வித பாதிப்புமின்றி தடையின்றி வழங்கப்பட்டு வருவதாக ஆவின் நிர்வாகம் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

# திருமூர்த்தி அணையில் வண்டல் மண் அள்ளும் பணி நிறுத்தம்; அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை



உடுமலை, ஆக. 2

'தினத்தந்தி' செய்தி எதிரொலியாக, அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை எடுத்து, திருமூர்த்தி அணையில் வண்டல் மண் அள்ளும் பணியை நிறுத்தினர்.

உடுமலையை அடுத்த மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உற்பத்தியாகும் பாலாற்றை தடுத்து திருமூர்த்தி அணை கட்டப்பட்டது. இந்த அணைக்கு வனப்பகுதியில் உற்பத்தியாகும் ஆறுகள், ஓடைகள் நீராதாரமாக உள்ளன.

இந்த அணை மூலம் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் 3 லட்சத்து 76 ஆயிரத்து 152 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் தளி மற்றும் வளையபாளையம் வாய்க்கால் மூலம் 3 ஆயிரத்து 44 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறுகிறது. மேலும் அணையை ஆதாரமாக கொண்டு கூட்டு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கோடைகாலத்தையொட்டி, அணையில் இருந்து வண்டல் மண்ணை எடுப்பதற்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதன் பேரில் திருமூர்த்தி அணையில் இருந்து வண்டல் மண் அள்ளிக்கொள்ள மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியது. இதையடுத்து, கடந்த 27ந் தேதியில் இருந்து வண்டல் மண் எடுக்கும் பணி தொடங்கியது. ஆனால் ஒரு சிலர் விவசாயிகள், போர்வையில் வண்டல் மண்ணை எடுத்து சென்று விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும் இதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்த செய்தி 'தினத்தந்தி'யில் பிரசுரமானது. இதன் எதிரொலியாக அதிகாரிகள் திருமூர்த்தி அணைக்கு சென்று, மண் அள்ளிக்கொண்டு வரும் வாகனங்களை சோதனை செய்தனர். இதையடுத்து முறைகேடாக வண்டல்மண் எடுத்துசெல்வது தெரியவந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அதிகாரிகள், வண்டல் மண் அள்ளுவதை நிறுத்தி வைத்தனர்.

ஆனாலும் இதுவரையிலும் எடுக்கப்பட்ட வண்டல் மண் விற்பனைக்கு எங்கு கொண்டு செல்லப்பட்டது? அது எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது? யார் யாருக்கு விற்பனை செய்தனர்? என்பது குறித்து விரிவான விசாரணை செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காவிரியில் நீர் பெற சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர தமிழகம் முடிவு: அன்புமணி வரவேற்பு!

சென்னை, ஆக. 2



காவிரியில் நீர் பெற உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர தமிழகம் முடிவு தாமதமாக எடுக்கப்பட்டாலும் சரியான நடவடிக்கை! என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

காவிரியில் தமிழ்நாட்டுக்கான தண்ணீரைப் பெறுவதற்காக சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்போவதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராக நடைபெறவிருந்த இரு தரப்பு பேச்சுக்களுக்கான கதவுகளை கர்நாடக அரசு மூடியதற்கு பிறகு மிகவும் தாமதமாகத் தான் இந்த முடிவை தமிழக அரசு எடுத்திருக்கிறது என்றாலும், காவிரி சிக்கலில் இது தான் சரியான நடவடிக்கையாகும்.

காவிரி நீர்ப் பகிர்வு, மேகதாது அணை சிக்கல் ஆகியவை குறித்து கர்நாடக முதல்மந்திரி டி.கே. சிவக்குமாருடன் தமிழக முதல்அமைச்சர் விஜய் நாளை மறுநாள் பெங்களூரில் சந்தித்து பேசுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், கர்நாடகத்திலும் வெடித்துள்ள போராட்டங்களைக் காரணம் காட்டி, இரு தரப்பு பேச்சுகளுக்கு உகந்த சூழல் நிலவவில்லை என்று கர்நாடக முதல்மந்திரி நேற்று அறிவித்ததைத் தொடர்ந்து அங்கு செல்லும் திட்டத்தை முதல்அமைச்சர் விஜய் கைவிட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது. அதற்கு மாறாக, காவிரியில் தமிழகத்திற்கு உரிய நீரை உடனடியாக திறந்து விடக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப் போவதாக சட்ட அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்திருக்கிறார். ஆகஸ்ட் ஐந்தாம் தேதிக்குப் பிறகு இந்த வழக்கு தொடரப்படும் என்று தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசு மறுக்கும் சிக்கலாக இருந்தாலும், மேகதாது அணையை கட்ட கர்நாடகம் சதி செய்யும் சிக்கலாக இருந்தாலும் அதை சட்டப்படியாக எதிர்கொள்வது தான் சரியானதாக இருக்கும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். ஆனால், அதற்கு மாறாக இந்த விவகாரத்தில் தவறானபாதையில் பயணித்ததமிழகஅரசு, இப்போதாவது சரியான பாதைக்கு திரும்பி இருப்பது மனநிறைவு அளிக்கிறது. இனிவரும் காலத்திலும் கூட காவிரி நீர்ப்பகிர்வு, மேகதாது விவகாரம் ஆகியவற்றில் கர்நாடக அரசுடன்எந்தவகையிலும்பேசுவதில்லை என்றகொள்கை முடிவை தமிழக அரசு எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் முதல்அமைச்சராக பொறுப்பேற்றுள்ள விஜய் அரசியலுக்கு புதிது என்பதால், புதுமையாக எதையாவது செய்து தமிழகத்திற்கு தண்ணீரை பெற வேண்டும் என்று நினைத்திருக்கலாம். ஆனால், கர்நாடகத்தில் எந்தக் கட்சியின் ஆட்சி நடந்தாலும் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க அம்மாநில முதல்மந்திரிகள் முன்வர மாட்டார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். காவிரிநடுவர்மன்ற இடைக்காலத்தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு ஆண்டுக்கு 205 டி.எம்.சி தண்ணீர் வழங்க வேண்டும். 1995ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி நிலவிய சூழலில் சுப்ரீம் கோர்ட்டே ஆணையிட்ட பிறகும் கூட தமிழகத்திற்கு கர்நாடகம் தண்ணீர் வழங்கவில்லை. அதன்பின் இந்த விஷயத்தில் பிரதமர் தலையிட்டு தீர்வு காண வேண்டும்எனசுப்ரீம்கோர்ட்டு ஆணையிட்ட பிறகு, அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் இது தொடர்பாக தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா, கர்நாடக முதல்மந்திரி தேவகவுடா ஆகியோரை அழைத்து பேச்சு நடத்தினார். அதன்பயனாக நடுவர் மன்றம் ஆணையிட்ட 11 டி.எம்.சிக்கு பதிலாக 6 டிஎம்சி நீரை மட்டும் கர்நாடகம் திறந்து விட்டது.

அதன்பின், 2002ஆம் ஆண்டில் காவிரி பாசன மாவட்டங்களில் உழவர்கள் எலிக்கறி சாப்பிடும் அளவுக்கு கடுமையான வறட்சி நிலவியது. அப்போது சம்பா பயிர்களைக் காப்பாற்றுவதற்காக தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடும்படி கர்நாடகத்திற்குபிரதமர்தலைமையிலான காவிரிநீர் ஆணையம் ஆணையிட்டது. ஆனால், கர்நாடகம் தண்ணீர்திறக்கமறுத்துவிட்ட நிலையில்சுப்ரீம்கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. அதை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, தமிழகத்திற்கு தினமும் 0.8 டி.எம்.சி தண்ணீர் திறக்க ஆணையிட்டது. ஆனால், அதையும் மதிக்காத கர்நாடக காங்கிரஸ் முதல்மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா தண்ணீர் திறக்க முடியாது என்று அறிவித்தார். அதைத் தொடர்ந்து அவர் மீது கோர்ட்டு அவமதிப்பு வழக்கை தமிழகம் தொடர்ந்தது.

அந்தவழக்கைவிசாரித்தசுப்ரீம்கோர்ட்டு, தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடாவிட்டால், கடுமையான விளைவுகள் ஏற்படும்; கோர்ட்டு அவமதிப்பு வழக்கில் சிறை தண்டனை வழங்கவும் தயங்க மாட்டோம் என்று 26.10.2002ஆம் நாள் ஆணையிட்டது. அதைத் தொடர்ந்து தான் கர்நாடகம் தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டது. அதன்பிறகும் எஸ்.எம். கிருஷ்ணா மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைக்காமல் நிலுவையில் வைத்துக் கொண்டே நவம்பர் 15ஆம் தேதி வரை தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்க சுப்ரீம் கோர்ட்டு ஆணையிட்டது. மிதவாதிகள் என்று அறியப்பட்ட எஸ்.எம்.கிருஷ்ணாவும், எச்.டி.தேவகவுடாவுமே சுப்ரீம் கோர்ட்டு ஆணையிட்ட பிறகும் கூட தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட முன்வராத நிலையில், காவிரி சிக்கலை தீவிரமாக்கியே அடுத்த தேர்தலிலும் முதல்மந்திரியாக பதவியைத் தக்க வைத்துக் கொள்ளத் துடிக்கும் டி.கே.சிவக்குமார் கேட்டவுடன் காவிரியில் தண்ணீர் திறந்து விடுவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறியாமையாகவே இருக்கும். இந்த அணுகுமுறையை அரசு கைவிட வேண்டும்.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஆணைப்படி தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட ஆணையிடும்படி சுப்ரீம் கோர்ட்டில் விரைந்து வழக்கு தொடர்ந்து நீரைப் பெற வேண்டும். அதுமட்டுமின்றி, மேகதாது அணை விவகாரத்திலும் மத்திய அரசும், கர்நாடக அரசும் செய்யும் கூட்டுச் சதியை உரிய தரவுகளுடன் சுப்ரீம் கோர்ட்டின் கவனத்திற்கு கொண்டு சென்று மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்க தடைவிதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜரானார் செந்தில் பாலாஜி!

சென்னை, ஆக. 2



த.வெ.க. ஆட்சியை கவிழ்ப்பதற்காக 15 எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க 'மேகாலயா புராஜக்ட்' என்ற பெயரில் அரங்கேறிய மிகப்பெரிய சதித்திட்டம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ. டாக்டர் இளையராஜா, சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜிடம் அளித்த புகார் அடிப்படையில், திருவல்லிக்கேணி போலீசார் இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

இளையராஜா எம்.எல்.ஏ.வுக்கு ரூ.35 கோடி பேரம் பேசப்பட்ட தாகவும் திடுக்கிடும் தகவல் வெளியானது. இதுவரை இந்த வழக்கில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தவழக்கில்முன்னாள்அமைச்சர் செந்தில்பாலாஜி, அவரது தம்பி அசோக்குமார் ஆகியோர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் கோர்ட்டில் முன்ஜாமீன் பெற்றனர்.

இதனையடுத்து, சென்னை முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் ஆஜரானார்கள். முறைப்படி, முன்ஜாமீனை செந்தில்பாலாஜியும், அவரது தம்பி அசோக்குமாரும் பெற்றுக்கொண்டனர். முன்ஜாமீன் நிபந்தனையில் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் தினமும் காலையிலும், மாலையிலும் ஆஜராகி, கையெழுத்திடவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் போலீஸ் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்றும் நிபந்தனையில் கூறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், செந்தில்பாலாஜியும், அவரது தம்பி அசோக்குமாரும் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட்டு வந்தனர். அவர்கள் இருவரிடமும், திருவல்லிக்கேணி போலீசார் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டனர். வழக்குதொடர்பாக போலீசார் கைப்பற்றியுள்ள ஆவணங்களை காட்டி, 50க்கும் மேற்பட்ட கேள்விகளை கேட்டு விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் தான், டாஸ்மாக் நிறுவனத்தில் நடந்த முறைகேடு தொடர்பாக, செந்தில்பாலாஜி மீது புதிய வழக்கு ஒன்றை லஞ்சஒழிப்பு போலீசார் பதிவு செய்தனர். இதன் காரணமாக காவல்துறையினர் கைது செய்வதற்கு வாய்ப்பிருப்பதால், கடந்த 2 நாட்களாக செந்தில் பாலாஜி காவல் நிலையத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்தார்.

இந்த வழக்கில் டாஸ்மாக் நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குனரான ஐ.ஏ.எஸ். அதிகாரி விசாகன் உள்ளிட்ட 7 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டு உள்ளனர். லஞ்சஒழிப்பு சட்டப்பிரிவு உள்பட 9 சட்டப்பிரிவுகளில் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 2021 முதல் 2025ம் ஆண்டு வரை முறைகேடு நடந்துள்ளதாகவும் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

இந்தசூழலில்டாஸ்மாக்முறைகேடுவழக்குதொடர்பாக முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி முன்ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி செந்தில் பாலாஜியின் முன்ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

முன் ஜாமீன் மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்த நிலையில், இதனை எதிர்த்து செந்தில் பாலாஜி தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு அவசர வழக்காக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது செந்தில் பாலாஜி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பழைய வழக்கை மீண்டும் கையில் எடுக்கிறார்கள். அவர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பார். செந்தில் பாலாஜிக்கு முன் ஜாமீன் வழங்க வேண்டும். மேலும் அவரை கைதுசெய்யக் கூடாது.' என வாதிட்டார்.

அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'டாஸ்மாக் வழக்கில் 100 கோடி ஊழல் செய்ததற்கான முகாந்திரம் உள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தில் வழக்கின் விசாரணைக்கு பல்வேறு வழிகளில் தடையை ஏற்படுத்தினார். அவரைகாவலில்எடுத்துவிசாரிப்பதற்கான தேவை உள்ளது.' என வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், அவர் விசாரணைக்கு ஒத்துழைப்பதை உறுதி செய்கிறோம். இதற்கு மேல் உங்களுக்கு என்ன வேண்டும். ? என தமிழக அரசு தரப்பு வழக்கறிஞரிடம் கூறினர். அத்துடன், செந்தில் பாலாஜிக்கு முன்ஜாமீன்வழங்கி உத்தரவிட்டனர். மேலும், அவரை கைது செய்யவும் தடை விதித்த நீதிபதிகள், இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்புத்துறை பதிலளிக்க உத்தரவு பிறப்பித்தனர்.

மேலும், பாஸ்போர்ட்டை ஒப்படைக்க வேண்டும், சாட்சிகளை கலைக்கக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகளை செந்தில்பாலாஜிக்குவழங்கியநீதிபதிகள், நிபந்தனைகளை மீறினால் முன் ஜாமீனை ரத்துசெய்வோம் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

செந்தில் பாலாஜிக்கு முன் ஜாமீன் வழங்கி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டதையடுத்து அவர் இன்று காலை திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜரானார். அவருடன் அவரது சகோதரர் அசோக்குமாரும் கையெழுத்திட ஆஜராகி உள்ளார். இதனையடுத்து, திருவல்லிக்கேணி போலீசார் செந்தில் பாலாஜியிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னையில் பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு: வாலிபருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை

சென்னை, ஆக. 2

17 வயது பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வழக்கில் தொடர்புடைய வாலிபருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சென்னை மகளிர் கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது. சென்னை நொளம்பூர் பகுதியை சேர்ந்த 17 வயது பள்ளி மாணவியுடன், இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய பாண்டியராஜன்(எ) ஜான் ஒபெத் (வயது 24) என்பவர் கடந்த 2021ம் ஆண்டு அந்த மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இது

குறித்து மாணவியின் தாயார் அளித்த புகாரின் பேரில் பாண்டியராஜன் மீது திருமங்கலம் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை சென்னை மகளிர் சிறப்பு கோர்ட்டில் நீதிபதி பிரபாகரன் முன்னிலையில் நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, பாண்டியராஜன் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறி அவருக்கு 20 ஆண்டுகள்சிறைதண்டனையும், ரூ.10ஆயிரம்அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார். மேலும் பாதிக்கப்பட்ட மாணவிக்கு தமிழக அரசு இழப்பீடாக ரூ.5 லட்சம் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக அமைச்சர் கீர்த்தனா நேரில் ஆய்வு

சிவகாசி, ஆக. 2



தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பதற்காக இரண்டு இடங்களை நேரில் ஆய்வு செய்தேன்.

1. பட்டாசு தொழிற்சாலைகள் அதிகம் உள்ள பகுதியின் அபாய நிலை

2. மக்கள் அடர்த்தி மற்றும் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு, மிகவும் பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்ய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பது எனது முதன்மை பொறுப்பு. அதனை உறுதிப்படுத்தும் வகையில்,


புதிய தீயணைப்பு நிலையம் விரைவில் அமைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை வெறும் வார்த்தைகளாக அல்லாமல், செயலாக்கமாக மாற்றுவதே எங்கள் அரசின் நோக்கம். மக்கள் நலனும், பாதுகாப்பும் எப்போதும் எங்கள் முன்னுரிமையாக இருக்கும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் 3.4 கிலோ கஞ்சா, கார், பைக் பறிமுதல்: 3 பேர் கைது

திருநெல்வேலி, ஆக. 2



திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம் பகுதியில் வாகன சோதனையில் 3 கிலோ 450 கிராம் கஞ்சா, ஒரு கார், ஒரு பைக்கை பறிமுதல் செய்த போலீசார் 3 பேரை கைது செய்தனர்.

திருநெல்வேலி மாநகரம், பெருமாள்புரம் பகுதியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு நான்கு சக்கர வாகனத்தை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தனர்.

அந்த சோதனையில், பெருமாள்புரம், ரெட்டியார்பட்டியைச்சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளி தினேஷ் (வயது 28), தச்சநல்லூர், சத்திரம்புதுகுளத்தைச் சேர்ந்த சரித்திர பதிவேடு குற்றவாளி மணி(எ) எஸ்டேட் மணி(44) மற்றும் வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த சுந்தரபாண்டியன்(எ) தமிழ் சிங்கம்(25) ஆகிய 3 பேரும் உயிருக்கு தீங்கு விளைவிக்கும் 3 கிலோ 450 கிராம் எடையுள்ள கஞ்சா வைத்திருந்தது கண்டறியப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அவர்களிடமிருந்து 3 கிலோ 450 கிராம் எடையுள்ள கஞ்சா, ஒரு கார் மற்றும் ஒரு பைக் பறிமுதல் செய்யப்பட்டு, பெருமாள்புரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, அந்த 3 பேரையும் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

# மேகதாது அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தை நாடுவதுதான் ஒரே தீர்வு: அமைச்சர் நிர்மல் குமார்

நெல்லை, ஆக. 2



நெல்லையில் அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: நமக்கு இருக்கின்ற ஒரே ஒரு வாய்ப்பு உச்ச நீதிமன்றம் தான்.. மத்திய நீர்வளத்துறை அமைச்சருக்கே இது பற்றி தெளிவு இல்லை. புரியவில்லை. தமிழகத்திற்கு விரோதி போல் பேசுகிறார். தமிழக அரசுக்கு எதிராக அவர் செயல்படுகிறார். கர்நாடகாவில் அணை கட்டுவதற்கு ஆதரவாக பேசுகிறார். மாநிலங்கள் இதில் எதுவும் செய்ய முடியாது. ஒன்றிய அரசு தான் இதில் செய்ய முடியும். கர்நாடகாவில் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும், பாஜக இருந்தாலும், காங்கிரஸ் இருந்தாலும் தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்க கூடாது என்பது தான் அவர்களுடைய நோக்கம். கர்நாடக விவகாரத்தில் தண்ணீர் பெற ஒரே ஒரு தீர்வாக உச்ச நீதிமன்றம் தான் உள்ளது.

இதில் என்ன செய்ய முடியுமோ அதனை இந்த அரசு செய்யும்" என்றார்.

அப்போது பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், காங்கிரஸ் ஆட்சி தான் கர்நாடகாவில் நடக்கிறது. ராகுல் காந்தி ஒரு வார்த்தை கூறினால் அவர் திறந்துவிட போகிறார். ஏன் ராகுல்காந்தி பேசவில்லை என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த நிர்மல் குமார், இதே அன்புமணி தான் காங்கிரஸோடு கூட்டணியில் இருந்தார். அப்போது கெஜட்டில் நோட்டிபிகேஷன் வரும் போது என்ன செய்துகொண்டு இருந்தார்.. இப்போது இருமாநிலங்களுக்குஇடையேயான பிரச்சினை என்றால் உச்சநீதிமன்றத்தை நாடுவது தான் ஒரே தீர்வு.. அனைத்துக் கட்சி கூட்டம் எப்போது விஜய் நடத்துவார் என்று கேட்கிறீர்கள். அனைத்து கட்சி கூட்டம் குறித்து முதல்வர் விஜய் முடிவெடுப்பார்"என்று கூறினார்.

# தி.மு.க.வில் தோப்பு வெங்கடாசலம் கட்சி பதவி பறிப்பு: த.வெ.க.வில் இணைய திட்டம்

சென்னை, ஆக. 2



தி.மு.க.வில் தோப்பு வெங்கடாசலம் கட்சி பதவி பறிக்கப்பட்ட நிலையில், அவர் த.வெ.க.வில்இணையதிட்டமிட்டுஇருப்பதாக கூறப்படுகிறது.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சராக இருந்த தோப்பு வெங்கடாலசம், பின்னர் தி.மு.க.வில் இணைந்தார். தி.மு.க.வில் அவருக்கு ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் பதவி வழங்கப்பட்டது. ஆனால், அவருக்கும், முன்னாள் தி.மு.க. அமைச்சர் முத்துசாமிக்கும் இடையே மோதல் போக்கு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், தி.மு.க.வில் தோப்பு வெங்கடாசலத்தின் கட்சிப் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

ஈரோடு மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலத்தை அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஈரோடு மத்திய மாவட்டத்திற்குரிய சட்டமன்ற தொகுதிகளான பெருந்துறை தொகுதி ஈரோடு தெற்கு மாவட்டத்திலும், பவானி தொகுதி ஈரோடு வடக்கு மாவட்டத்திலும் இணைக்கப்பட்டு அந்தந்த மாவட்ட செயலாளர்கள் நிர்வகிப்பார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

விரைவில் தோப்பு வெங்கடாசலம் தி.மு.க.வில் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, த.வெ.க.வில் இணைவார் என்று தெரிகிறது.

# மாமல்லபுரத்தில் காங்கிரஸ் பயிற்சி முகாம்: சென்னை வந்த ராகுல் காந்திக்கு உற்சாக வரவேற்பு

சென்னை, ஆக. 2



தமிழ்நாடு காங்கிரஸ் மாவட்டத் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் மாமல்லபுரத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு சொந்தமான கடற்கரை விடுதியில் கடந்த 23ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. பயிற்சி முகாமின் நிறைவுநாளான இன்று (சனிக்கிழமை) நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பங்கேற்கிறார். இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு காலை 10.05மணிக்கு சென்னைவிமானநிலையம்வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம்தாகூர்உள்ளிட்டோர்ராகுல்காந்திக்குவரவேற்பு அளித்தனர். தொண்டர்களும் ராகுல் காந்திக்கு உற்சாக வரவேற்பு கொடுத்தனர். பின்னர் மாவட்டத்தலைவர்கள் பயிற்சி முகாமில் பங்கேற்க மாமல்லபுரத்திற்கு ராகுல் காந்தி புறப்பட்டு சென்றார். பயிற்சி முகாமில் ராகுல்காந்தி உரையாற்றுகிறார். பின்னர், மாவட்டத் தலைவர்களின் குடும்பத்தி னரை சந்திக் கிறார். மாலை 4 மணியளவில் காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகளை சந்தித்து உரை யாடுகிறார். அதேபோன்று, கோவை மற்றும் சேலம் பகுதிகளில் நீட் தேர்வால் பலியான 4 மாணவமாணவிகளின் பெற் றோரை சந்திப்பதற்கான ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. பின்னர் சென்னை வந்து இரவு 7 மணிக்கு விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு செல்கிறார். ராகுல் காந்தி வருகையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# நகை கொள்ளை வழக்கில் 5 பேருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை

தூத்துக்குடி, ஆக. 2



தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பகுதியில் நடந்த நகை கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட 5 குற்றவாளிகளுக்கு தலா 7 ஆண்டுகள்சிறைதண்டனைவிதித்துஸ்ரீவைகுண்டம் சார் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல், இடையற்காடு பகுதியில் கடந்த 2016ம் ஆண்டு நடந்த (8 சவரன் தங்க நகை) கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்ட கோயம்புத்தூர் பகுதியை சேர்ந்தவர்களான குணசிங் மகன் டேவிட் (வயது 38), முபாரக் மகன் அப்பாஸ்(30), அப்பாஸ் மகன் முகமதுரபிக்(31), மற்றொரு குணசிங் மகன் சஞ்சய்(44) மற்றும் ஏரல் கோவங்காடு பகுதியைச் சேர்ந்த லிங்கபாண்டியன் மகன் மகேஸ்வரன்(41) ஆகிய 5 பேரையும் ஏரல் காவல் நிலைய போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இது தொடர்பான வழக்கின் விசாரணை ஸ்ரீவைகுண்டம் சார் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் மேற்சொன்ன நீதிமன்ற நீதிபதி பர்ஷாத் பேகம் நேற்று மேற்சொன்ன டேவிட், சஞ்சய், அப்பாஸ், முகமதுரபிக் மற்றும் மகேஸ்வரன் ஆகிய 5 பேரையும் குற்றவாளிகள் என உறுதி செய்து, அவர்களுக்கு தலா 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

02.08.2026


# 7 மாவட்டங்களில் மாலை 4 மணி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக. 2

காற்றழுத்தத் தாழ்வுப்பாதை காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், தமிழகத்தின் 7 மாவட்டங்களில் மாலை 4 மணி வரை மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வுமையம்தெரிவித்துள்ளது.அதன்படி, கன்னியாகுமரி,திருநெல்வேலி,தென்காசி, தேனி, கோவை, நீலகிரி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# 200 யூனிட் இலவசம் என்று சொல்லிட்டு 4 மடங்கு வரை மின் கட்டணம் உயர்ந்தது எப்படி? சீமான் கேள்வி



சென்னை, ஆக. 2

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டில் நடப்பு மாதம் தமிழ்நாட்டின் பெரும்பாலான வீடுகளுக்கான மின்சார கட்டணம் 4 மடங்கு வரை உயர்ந்துள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தவெக அரசு 200 யூனிட் வரை மின்சாரம் இலவசம் என்று அறிவித்த நிலையில், அதற்கு நேர் எதிராகப் பெரும்பாலான வீடுகளுக்கு வழக்கத்தைவிடப் பல மடங்கு மின்கட்டணம் அதிகரித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

மின்வாரிய ஊழியர்களின் அலட்சியத்தால் தாமதமாக மின் அளவீடு எடுக்கப்பட்டதும், பழுதான மின் அளவீட்டுக் கருவிகள் குறித்த புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுமே மின்கட்டண உயர்வுக்கு காரணம் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். 200 யூனிட் இலவச மின்சாரத்தின் பலன் மக்களுக்குக் கிடைக்கப்பெறாமல் இருக்க வேண்டுமென்றே திட்டமிட்டு தாமதமாக மின் அளவீடு செய்யப்பட்டதோ? என்ற சந்தேகமும் எழுகின்றது. தாமதிக்கப்பட்ட மின் அளவீட்டினால், மின்பயன்பாடு 500 யூனிட்டிற்கு மேல் அதிகமானதால், 200 யூனிட் இலவச மின்சாரத்தின் பலன் கிடைக்காததோடு, ஓர் அலகிற்கான மின் கட்டண விகிதமும் அதிகரித்துள்ளது. மின்கட்டணஅமைப்பில்உள்ளநடைமுறை மற்றும் தொழில்நுட்ப குளறுபடிகளும், தாமதமான மின்கணக்கீடும்தான் தற்போதைய தாறுமாறான கட்டண உயர்வுக்கு அடிப்படை காரணமாகும்.

தவெகதன்னுடையதேர்தல்அறிக்கையில் மாதம் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும்என்றுகூறியிருந்தநிலையில் தேர்தலில் வென்று ஆட்சி, அதிகாரத்தில் அமர்ந்த பிறகு இரண்டு மாதத்திற்கு 200 யூனிட் இலவசம் என்றும், அதுவும் 500 யூனிட்வரைபயன்படுத்தும்நுகர்வோருக்கு மட்டுமே என்றும் அறிவித்து மக்களை ஏமாற்றியது போதாதென்று தற்போது, மின்கணக்கீட்டில் குளறுபடிகள் செய்து வழக்கத்தை விட பன்மடங்கு மின்கட்டணம் உயரவும் காரணமாகியுள்ளது பெருங்கொடுமையாகும். மாதம் ஒரு முறை மின் கணக்கீடு செய்யும் நடைமுறையை உடனடியாகச் செயல்படுத்துவதும், மின்னிலக்க அளவீட்டுக் கருவியை விரைந்து பொருத்துவதும் மட்டுமே இது போன்ற குளறுபடிகள் இனி வருங்காலத்தில் நடைபெறாமல் தடுக்கவும், மக்கள் பயன்படுத்தும்அளவிற்கானஉண்மையான மின்கட்டணத்தை செலுத்துவதற்கான வாய்ப்பாகவும் அமையும்.

ஆகவே, தமிழ்நாடு அரசு மின் கணக்கீட்டில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளால்பாதிக்கப்பட்டமக்களுக்கு பன்மடங்கு தற்போது அதிகரித்துள்ள மின் கட்டணத்தை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும், வாக்குறுதி அளித்தபடி மாதம் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்குவதற்கான அரசாணையை உடனடியாக வெளியிட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மெட்ரோவின் புதிய சாதனை: ஜூலை மாதத்தில் 1.06 கோடி பேர் பயணம்!



சென்னை, ஆக. 2

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ ரெயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது.

அந்த வகையில் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 1,06,37,647 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

அதிகபட்சமாக 24.07.2026 அன்று 3,84,412 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். 2026, ஜூலை மாதத்தில் மட்டும் சிங்கார சென்னை அட்டையை (தேசிய பொது இயக்க அட்டை) பயன்படுத்தி 55,87,494 பயணிகள், க்யுஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி (Single Journey Paper QR 19,66,202, Online QR – 1,47,760, Static QR 2,24,701, Whatsapp 4,51,715, Paytm 2,99,228, ONDC – 12,68,411, PhonePe – 2,84,121, CMRL Mobile App(SVP) 95,430, Chennai One App – 2,98,702, HCL 50 Year Celebration Music Concert Event QR – 13,883) பயணிகளும் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

# தீரன் சின்னமலை நினைவு தினம்: ஈரோட்டில் 13 டாஸ்மாக் கடைகள் நாளை மறுநாள் மூடல்

ஈரோடு. ஆக. 2

அறச்சலூர் அருகே உள்ள ஓடாநிலையில் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை நினைவு தினம் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) அரசு விழாவாக அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி விழா நடைபெறும் பகுதியில் 3 கி.மீ. சுற்றளவில் செயல்படும் டாஸ்மாக் மதுபான கடைகள் மற்றும் விழாவுக்கு ஊர்வலமாக செல்லும் வழியில் உள்ள டாஸ்மாக் கடைகள் மற்றும் அதனுடன் இயங்கும் மதுக்கூடங்கள் அன்று மூடப்பட்டிருக்க வேண்டும். அதன்படி ஈரோடு மூலப்பாளையம், அசோகபுரம், ஈரோடு ரெயில் நிலையம் எதிரில் உள்ள எலைட் மதுபான கடைகள் நாளை மறுநாள் மாலை 6 மணி வரை செயல்படாது.

மேலும் வடபழனி, அறச்சலூர், வாங்கலாம்வலசு, அவல்பூந்துறை, அனுமன்பள்ளி, முள்ளாம்பரப்பு, கந்தசாமிபாளையம், முத்தூர்ரோடு மாரப்பம்பாளையம், சோலார், ஆனைக்கல்பாளையம், பச்சப்பாளி, ஈரோடு நாடார்மேடு, பெருந்துறை ஆர்.எஸ். ஆகிய பகுதிகளில் செயல்படும் 13 மதுபானக்கடைகளும் அன்று மூடப்பட்டு இருக்கும். அன்றைய தினம் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது என்றும், மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மாவட்ட கலெக்டர் கந்தசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் (02.08.2026)

**மேஷம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மூத்த அதிகாரிகளின் ஆதரவும் வழிகாட்டுதலும் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

**ரிஷபம்:** தொழிலில் இருந்த சிக்கல்கள் விலகும். வங்கி கடன் முயற்சி செய்துகொண்டிருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களை அளவுக்கு அதிகமாக நம்புவதைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.வாகனப்பயணங்களிலும் பணப் பரிவர்த்தனைகளிலும் அதிக கவனம் தேவை.

**கடகம்:** சந்திராஷ்டம நிறைவு என்பதால் பிற்பகலுக்கு மேல் நிம்மதி கூடும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். கூட்டுத் தொழில் மற்றும் வாடிக்கையாளர் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்

**சிம்மம்:** தொழில் சார்ந்த விஷயங்களில் நிதானம் தேவை. அவசரப்பட்டு பெரிய முதலீடுகளைச் செய்ய வேண்டாம். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல கவனம் மற்றும் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கும்.

**துலாம்:** புதிய திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். காதலிப்பவர்களுக்கு இடையே புரிந்துணர்வு கூடும். பணிபுரியும் இடத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். எடுத்த காரியங்களில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும்.

**தனுசு:** பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் சுப பேச்சுகள் சுமுகமாக முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மையளிக்கும்.

**மகரம்:** சந்திரனின் சாதகமான நகர்வால் மன அமைதி கூடும். எதிர்பார்த்த உதவிகளும் பரிசுகளும் கிடைக்கும். ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்:** தேவையற்ற விரயச் செலவுகள் வரக்கூடும் என்பதால் சிக்கனம் தேவை. வெளிநாடு அல்லது வெளியூர் தொடர்பான செய்திகள் சாதகமாக வரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். நிலுவையில் இருந்த பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

# காவல்துறையின் உதவியோடு விளைநிலங்களை பறிக்கும் தவெக அரசு: டிடிவி தினகரன் கண்டனம்

சென்னை, ஆக. 2

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"விளைநிலங்களின் வழியே எண்ணெய் குழாய்கள் பதிக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடிய விவசாயிகள் வலுக்கட்டாயமாககைது–காவல்துறையின் உதவியோடு விளைநிலங்களை பறிக்கும் தவெக அரசின் விவசாய விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் சார்பில் கோவையிலிருந்து, கர்நாடக மாநிலம் தேவனஹொந்தி வரை 340 கி.மீட்டர் தூரத்திற்கு எண்ணெய் குழாய் பதிக்கும் திட்டம் நடைபெற்று வரும் நிலையில், இருகூரில் இருந்து முத்தூர் வரையிலான 70 கி.மீட்டர் தூரத்திற்கு விளைநிலங்களின் வழியே எண்ணெய் குழாய் பதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்லடத்தில் போராடிய விவசாயிகளை காவல்துறையினரின் மூலம் வலுக்கட்டாயமாக கைது செய்த தவெக அரசின் அதிகாரப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

விவசாயிகளின்வாழ்வாதாரமாகதிகழும் விளைநிலங்களின் வழியே எண்ணெய் குழாய்கள்அமைக்கப்படுவதால்,நிலத்தின் பயன்பாடு, நிலத்தடி நீர், விவசாய உற்பத்தி என பல்வேறு பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றவிவசாயிகளின்குரலுக்குசெவிசாய்க்க மறுத்து, அவர்களின் போராட்டத்தை ஒடுக்க தவெக அரசு கையாண்டிருக்கும் அடக்குமுறை, ஆணவம் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தின் உச்சமாகும்.

கடந்த ஆட்சிக்காலங்களில் இதே திட்டத்திற்கு எதிராக விவசாயிகள் நடத்திய தொடர் போரட்டங்களின் விளைவாக எண்ணெய் குழாய்கள் அமைக்கும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், தவெக ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில், காவல்துறைஉதவியுடன்விளைநிலங்களை வலுக்கட்டாயமாக பறிக்க முற்படுவது ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும் தவெக அரசு இழைக்கும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

எனவே,வாழ்வாதாரத்திற்காகபோராடும் விவசாயிகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களின் கோரிக்கையின் படி சாலையோரமாகவோ அல்லது நெடுஞ்சாலைகளின் ஓரமாகவோ எண்ணெய்குழாய்களைபதிக்கும்வகையில் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனதவெகஅரசையும்,அதன்முதலமைச்சர் ஜோசப்விஜய்யையும்வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பேய் படங்கள் என்றால் பயம்.. ஆனால் நல்ல கதை இருந்தால் நடிப்பேன் நடிகர் யாஷ்



கீது மோகன்தாஸ் இயக்கத்தில் 'டாக்ஸிக்' திரைப்படத்தில் நடித்துள்ள யாஷ் சமீபத்திய பேட்டியில், தனக்கு பேய் படங்களை பார்ப்பது பிடிக்காது என்றும், வலுவான ஹாரர் நடிக்க தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

நடிகர் யாஷ், இயக்குநர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் வெளியான 'கே.ஜி.எப்' மற்றும் 'கே.ஜி.எப் 2' படங்களின் மூலம் இந்திய அளவில் மிகப்பெரிய நட்சத்திரமாக உயர்ந்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி உள்ளிட்ட பல மொழிகளில் வெளியான இந்த படங்கள் வசூலில் சாதனை படைத்து, யாஷுக்கு நாடு முழுவதும் மிகப்பெரிய ரசிகர் பட்டாளத்தை உருவாக்கின.

தற்போது யாஷ், இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில் உருவாகி வரும் 'டாக்ஸிக்' திரைப்படத்தில் நடித்துள்ளார். கேவிஎன் நிறுவனம் தயாரிப்பில் கேங்ஸ்டர் டிராமாவாக தயாராகி உள்ள இந்த படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. அதனை தொடர்ந்து நிதேஷ் திவாரி இயக்கத்தில் உருவாகி வரும் ராமாயணா படத்தில் ராவணனாக நடித்து வருகிறார்.

இந்த நிலையில், சமீபத்தில் அளித்த பேட்டியில் நடிகர் யாஷ் தனது திரைப்பட ரசனை குறித்து மனம் திறந்து பேசியுள்ளார். அதில், "எனக்கு பேய் படங்களை பார்ப்பது பிடிக்காது. தியேட்டருக்கு சென்று பயப்பட நான் விரும்புவதில்லை. சில நேரங்களில் ஹாரர் படங்கள் பயத்தை விட வேடிக்கையாகவே தோன்றும். அதே நேரத்தில், வலுவான கதைக்களம் இருந்தால் ஹாரர் படங்களில் நடிக்க எனக்கு எந்த தயக்கமும் இல்லை. ஆனால், ஆக்ஷன் படங்கள்தான் என்னுடைய ஆல்டைம் பேவரைட்" என்றும் யாஷ் கூறியுள்ளார். அவரது இந்த கருத்து ரசிகர்களிடையே கவனம் பெற்று வருகிறது.

# 'போர்டிட்யூட்' படத்தின் மாஸ்டர் காப்பி திருட்டு... நெட்பிளிக்ஸ் மீது ரூ.1000 கோடி நஷ்டஈட்டு வழக்கு



நிக்கோலஸ் கேஜ் நடித்த போர்டிட்யூட் படத்தின் மாஸ்டர் காப்பி திருடப்பட்டதால் நெட்பிளிக்ஸ் நிறுவனத்திற்கு எதிராக 105 மில்லியன் அமெரிக்க டாலர் இழப்பீடு கோரி படக்குழு வழக்கு தொடர்ந்துள்ளது.

போர்டிட்யூட் என்பது சைமன் வெஸ்ட் இயக்கிய ஸ்பை திரில்லர் படமாகும். இந்த படத்தில் நிக்கோலஸ் கேஜ் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும் மேத்யூ கூட் , எட் ஸ்க்ரெயின் , ஆலிஸ் ஈவ் , மைக்கேல் ஷீன் மற்றும் பென் கிங்ஸ்லி ஆகியோர் முக்கிய கதாபாத்திங்களில் நடித்துள்ளனர் . இந்த படம் விரைவில் தியேட்டர்களில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள நெட்பிளிக்ஸ் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த 'போர்டிட்யூட்' திரைப்படத்தின் மாஸ்டர் காப்பி திருடப்பட்டதாக பரபரப்பு குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த சம்பவத்தால் படத்தின் வணிக மதிப்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி, தயாரிப்பாளர் சைமன் அப்ரம், நெட்பிளிக்ஸ் நிறுவனத்திற்கு எதிராக 105 மில்லியன் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட ரூ.1000 கோடி) இழப்பீடுகோரிகலிபோர்னியாநீதிமன்றத்தில்வழக்குதொடர்ந்துள்ளார்.படத்தின்ஒரேமாஸ்டர்காப்பிதிருடப்பட்டதால் வெளியீட்டுத் திட்டம், விநியோக ஒப்பந்தங்கள் மற்றும் விருதுப் போட்டிகளுக்கான திட்டங்கள் பாதிக்கப்பட்டதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளை நெட்பிளிக்ஸ் மறுத்துள்ளது. படத்தின் பாதுகாப்பு நடைமுறைகளை தயாரிப்பாளர்களே முறையாகபின்பற்றவில்லைஎன்றும்,திருட்டுசம்பவம்தொடர்பாகவிசாரணைநடத்திவருவதுடன்,படம்இணையத்தில் சட்டவிரோதமாக வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும் கண்காணித்து வருவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அந்தோணி இயக்கி நடித்த 'ஏன் என்னை ஏதோ செய்தாய்' படத்தின் டீசர் வெளியீடு




அறிமுக இயக்குநர் டி. அந்தோணி இயக்கி, நடித்த 'ஏன் என்னை ஏதோ செய்தாய்' திரைப்படத்தின் டீசர் வெளியாகி மக்கள் மத்தியில் கவனத்தை பெற்று வருகிறது.

அறிமுக இயக்குநர் டி. அந்தோணி இயக்கி, கதாநாயகனாக நடித்துள்ள 'ஏன் என்னை ஏதோ செய்தாய்' திரைப்படம் வரும் ஆகஸ்ட் 21 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது. மனதை வருடும் காதல் மற்றும் உணர்வுபூர்வமான கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படம் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் படத்தில் டி. அந்தோணியுடன், மதுமிதா தாஸ், ஜீவா ரவி, ரெஜின் ரோஸ், ஆலம் ஷா, நவ்யா சுஜி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சமீபத்தில் வெளியான 'தேடல் தொடருதே..' லிரிக்கல் பாடல் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து வெளியான டீசரும் படத்தின் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

# சீன தைபே ஓபன் பேட்மிண்டன்: இந்திய வீராங்கனை தன்வி ஷர்மா அரையிறுதிக்கு முன்னேற்றம்



சீன தைபே ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி தைபேய் சிட்டியில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீரர் கிரண் ஜார்ஜ் 12-21, 10-21 என்ற நேர்செட்டில் யுடை ஒகிமோட்டாவிடம் (ஜப்பான்) தோல்வி அடைந்து வெளியேறினார்.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை தன்வி ஷர்மா, தாய்லாந்தின் சுபனிதா கேடேதோங் உடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தன்வி ஷர்மா, 21-15,18-21,21-14என்றசெட்கணக்கில்சுபனிதாகேடேதோங்கை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

# நெதர்லாந்து அணியின் கேப்டன் பதிவிலிருந்து ஸ்காட் எட்வர்ட்ஸ் விலகல்



நெதர்லாந்து கிரிக்கெட் அணியின் கேப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ், தனது கேப்டன் பதவியில் இருந்து விலகியுள்ளார். இந்த தகவலை நெதர்லாந்து கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. ஸ்காட் எட்வர்ட்ஸ் விலகியதைத் தொடர்ந்து, அணியின் ஆல்ரவுண்டரான பாஸ் டி லீடே புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.


நமீபியாவுக்கு எதிரான போட்டிக்குப் பிறகு அணியினரிடம் பேசிய அவர், இந்த முடிவு குறித்து பயிற்சியாளர் ரையன் குக்குடன்நீண்டநாட்களாகஆலோசித்துவந்ததாகதெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்த நேரம்தான் சரியானது என்று நான் உணர்கிறேன். கேப்டனாக மட்டுமல்லாமல், ஒரு வீராங்கனையாக அணிக்காக இன்னும் நிறைய பங்களிக்க முடியும் என்று நம்புகிறேன். அதுவே இனி எனது முக்கிய இலக்காக இருக்கும்.

மேலும், "இது மிகவும் சிறப்பான அணி. இந்த அணியின் எதிர்காலம் மிகப் பிரகாசமாக இருக்கும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உள்ளது. இனி வரும் பயணத்தை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். என்று ஸ்காட் எட்வர்ட்ஸ் தெரிவித்தார்.

# காமன்வெல்த் போட்டி: ஜூடோவில் இந்திய வீரர் ஹரிஷ் சிங் தங்கம் வென்றார்



கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், இந்திய ஜூடோ வீரர் ஹர்ஷ் சிங் ஆடவர் 60 கிலோஎடைப்பிரிவில்தங்கப்பதக்கம்வென்று அசத்தியுள்ளார்.

இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவின் ஜோஷுவா காட்ஸ் ஐ 100 என்ற கணக்கில் வீழ்த்தி ஹர்ஷ் சிங் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் காமன்வெல்த் மேடையில் இந்திய ஜூடோவுக்கு மேலும் ஒரு வரலாற்றுச் சாதனையை சேர்த்துள்ளார். முன்னதாக மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு ஜூடோ போட்டியில் இந்தியாவின் அஸ்மிதா டே தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.